பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 07 புதன்கிழமை (23.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 268

## புலிகளுக்கு ஆயுதம் வாங்க முயன்றனராம்

# அமெரிக்காவில் எட்டுத் தமிழர்கள் கைது!

## பிணை அனுமதியில்லா விளக்கமறியல் அவர்களுக்கு எதிராக வழக்கும் தாக்கல்

வாஷிங்டன், ஓகஸ்ட் 23

**விடுதலைப் புலிகளுக்கு கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு உதவினர் என்று குற்றம் சுமத்தி அமெரிக்கா மற்றும் கனடா வாழ் தமிழர்கள் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.**

**பிணையில் செல்ல முடியாத தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இந்த எண்மருக்கும் எதிராக நியூயோர்க் புறூக்லின் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.**

விடுதலைப் புலிகளுக்குக் கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணமாகவும், பொருளாகவும் ஆதரவு தந்தமை உட்படத் தரையிலிருந்து ஆகாயத்துக்கு ஏவும் ஏவுகணைகள், ஏவுகணை லோஞ்சர்கள் (செலுத்திகள்), ஏ.கே. - 47 ரகத் துப்பாக்கிகள் என்பவற்றை வாங்கிக் கொடுப்பதற்குச் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி கனடா, அமெரிக்கா வாழ் எட்டுத் தமிழர்களுக்கு எதிராக நியூயோர்க் மாநிலத்திலுள்ள புறூக்லீன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்க நீதித் துறைத் திணைக்களம் இங்கு அறிவித்திருக்கின்றது.

அமெரிக்காவின் பயங்கரவாதத் தடைப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளின் பெயரை நீக்குவதற்கு உதவுமாறு கேட்டு

(04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் சபைக்குக் கறுப்புச் சால்வையுடன்

கொழும்பு, ஓக.23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்றத்துக்கு கறுப்பு சால்வையுடன் வந்திருந்தனர்.

முல்லைத்தீவு 'செஞ்சோலை' வளாகம் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சு காரணமாக 61 பாடசாலை மாணவிகள் கொல்லப்பட்டமை, வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் பலியானமை ஆகிய சம்வங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று கறுப்பு சால்வையணிந்து சபைக்கு வந்திருந்தனர்.

வடக்கு - கிழக்கில் இப்போது நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. இது குறித்து

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் நேற்றுக்காலை இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஓக.23

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் - புன்னாலைக் கட்டுவன் வீதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த இளைஞர் தனது சகோதரியை ஏற்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியிலும் நேற்றுச் சூடு; குடும்பஸ்தர் பலி!

கரவெட்டி கிழக்கு, கிழவிதோட்டத்தில் நேற்றுமாலை 5 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த பெருமாள் சந்திரகுமார் (வயது44) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்டவர் என இனங்காணப்பட்டுள்ளார். (ம-1)

## வீதியில் அநாதரவாக நின்ற சைக்கிளின் கூடைக்குள்ளிருந்து கிளைமோர் மீட்பு!

### பொரளையில் நேற்றுக்காலை பரபரப்புச் சம்பவம்

பொரளை, ஓக.23

பொரளை வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றின் கூடையிலிருந்து கிளைமோர் குண்டு ஒன்றை நேற்றுக் காலை பொலிஸார் மீட்டிருக்கின்றனர்.

பொரளை வை.எம்.பி.ஏ. சந்திப் பகுதியில் தனியார் வங்கி ஒன்றுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் இருந்தே இந்தக் குண்டு மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை வீதி ஓரமாக நீண்ட நேரமாக - அநாதரவாக நின்றது ஒரு சைக்கிள். அந்தச் சைக்கிளின் பின்பக்கக் 'கரியரில்' பல கையாலான பெட்டி ஒன்று. அதற்குள் சில மரக்கறி வகைகள் காணப்பட்டன. நீண்ட நேரமாக மரக்கறிக் கூடையுடன் அந்தச் சைக்கிள் அநாதரவாக நின்றது.

காலை 9 மணியளவில் அப்பகுதியில் வீதிக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு கான்ஸ்டபிள் ஒருவருக்கு அந்தச் சைக்கிள் மீது சந்தேகம் ஏற்பட்டது. உடனே அவர் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் அனுப்பினார். உடனடியாக அங்கு விரைந்து வந்த பொலிஸாரும், படையினரும் குறித்த சைக்கிளைத் துருவினர். மரக்கறிகளை வெளியே எடுத்தனர். அப்

(04 ஆம் பக்கம் பார்க்க)



மீட்கப்பட்ட குண்டைச் சோதிக்கும் படையினர்.

## இலங்கை அரசு மீது தடை விதிக்குமாறு சுவிஸில் தமிழர்கள் உரத்துக் கோஷம்!

ஜெனிவா, ஓக.23

இலங்கை அரசுக்கு எதிராக சுவிஸ் அரசு தடைகளை விதிக்க வேண்டும் என்று சுவிஸில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

கடந்த ஒரு மாத காலமாக சுவிஸில் மாநிலங்கள் தழுவிய ரீதியில் ஈழத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த 'சாவிலும் வாழ்வோம்' கவன ஈர்ப்புப் போராட்டத்தின் நிறைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பெருமளவில் ஒன்று திரண்ட தமிழ் மக்கள், ஈழத் தமிழர்கள் மீது வன்முறைகளை ஏவி விட்டிருக்கின்ற ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக சுவிஸ் அரசு தடைகளை விதிக்க வேண்டும் என்று உரத்த குரலில் கோஷம் எழுப்பித் தீர்மானம் நிறைவேற்றினர்.

சுவிஸ் தமிழர் பேரவை மற்றும் சுவிஸ் இளையோர் அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் அந்த நாட்டின் நாடாளுமன்றம் முன்பாக இந்த எழுச்சி நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ். ஜெயானந்தமூர்த்தி ஆகியோரும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தனர்.

சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், சுவிஸ் நாட்டுப் பிரஜைகள், மனித உரிமை

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மூவர் சுட்டுக்கொலை

திருமலை, ஓக.23

திருகோணமலையில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் மூவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் உப்புவெளி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முருகபுரி என்ற இடத்தில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆட்டோச் சாரதியான பாலச்சந்திரன் என்று அவர் அடையாளம் காணப்பட்டார்.

அதேபொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாம்பல் தீவு என்ற இடத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டது. நேற்றுமுன்தினம் இனந்தெரியாதவர்களால் விசாரணைக்கு என இந்த இளைஞர் அழைத்துச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. கொல்லப்பட்டவர் யார் என்பது உடனடியாக அடையாளம் காணப்படவில்லை.

குச்சவெளிப் பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட இக்பால் நகரில் இருந்து மற்றொரு அடையாளம் காணப்படாத சடலமும் நேற்று மீட்கப்பட்டது. இந்த இரு சடலங்களும் அடையாளம் காண்பதற்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

### ஊரடங்கு தளர்த்தப்படும் வேளைகளில்

## அரச திணைக்களங்கள் நேற்றுமுதல் மட்டுப்படுத்திய சேவையை ஆரம்பித்தன!

யாழ்ப்பாணம், ஓக.23

குடாநாட்டில் ஊரடங்கு காரணமாக மூடப்பட்டிருந்த அரச செயலகங்கள் பலவும் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீண்டும் சேவையை ஆரம்பித்தன.

கடந்த 11ஆம் திகதி இரவு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஊரடங்கு காரணமாக செயலகம் தவிர்ந்த ஏனைய திணைக்களங்கள் அனைத்தும் செயலிழந்திருந்தன.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரங்களில் கூட ஊழியர்கள் அலுவலகங்களுக்கு வருகை

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலிருந்து லொறிகள் கொழும்புக்கு வரத் தடை

மட்டக்களப்பு, ஓக.23

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து பார ஊர்திகள் கொழும்பு செல்வதற்கும், கொழும் பிலிருந்து குறிப்பிட்ட மாவட்டங்களுக்குச் செல்லவும் பாதுகாப்பு அமைச்சினால் [illegible] உள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு கொழும்பிலிருந்து உலர் உணவுப் பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன. அதேபோன்று அங்கிருந்து மீன்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இவ்

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை பல.நோ.கூ. சங்கத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான

**சின்னத்தம்பி சிவமகாராசா**

கூட்டுறவு என்றால் சிவமகாராசா
சிவமகாராசா என்றால் கூட்டுறவு என்று
வரலாற்றுத் தடம் பதித்த வல்லவனே
வலி.வடக்கின் முதல்வனே
மக்கள் வாழ்வின் உயிர் மூச்சே
இருபத்துநான்கு மணி நேரமும்
மக்களுக்காய் உழைத்த உத்தமனே
நீங்கள் அகால மரணமடைந்த செய்தி
எங்கள் நெஞ்சைப் பிளக்கின்றதே
உங்கள் ஆத்ம சாந்திக்காக் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், பொதுச்சபை
பிரதிநிதிகள், அங்கத்தவர்கள்,
தெல்லிப்பழை.பல.நோ.கூ.சங்கம்.

## எமது மனம் நிறைந்த கண்ணீர் பூக்கள்



**நவரத்தினம் தெய்வேந்திரன் (J.P.)**

(மஹாத்மா அச்சக உரிமையாளரும், ஏழாலை கருணாகரப்பிள்ளையார் மடாலய தர்மகர்த்தாக்களில் ஒருவரும், மல்லாகம் மத்தியஸ்தர் சபை உறுப்பினரும், இந்து சமயப் பேரவை உறுப்பினரும்)

மலையொன்று சரிந்து மடிந்ததுவோ - மண்மீது
சிலையாக நிற்கின்றேன் சிந்திக்கிறேன் - செந்நீராய்
உலைமீது மெழுகாக உருகி வடிக்கின்றேன்
அலையாக வந்ததுவோ உங்கள் அவலச் செய்தி
தாங்க முடியாத மனத்துயரத்துடன் வாடுகின்றேன்.

(திடீர் சுகவீனமுற்ற ந.தெய்வேந்திரன் அவர்களை ... வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனளிக்காதவிடத்து உடனடியாக கொழும்பு பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கும் சிகிச்சை பலனளிக்காது ஒரு கிழமையின் பின்னர் 16.08.2006 அன்று மரணமாகியுள்ளார். மறுநாள் 17.08.2006 கொழும்பிலுள்ள மகள் திருமதி.சா.மகாசேனன் வீட்டில் மரணச் சடங்கு நடைபெற்றுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.)

ரஞ்சினி
*மகாத்மா அச்சகம், இந்து மகளிர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## கண்ணீர் கடலாக .......

எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை மக்கள் சேவைக்கு வழிகாட்டிய சேவைச் செம்மல், எமது ஆயுட் கால உறுப்பினராக பல காலம் எம்முடன் சேர்ந்து சேவை செய்த சிறந்த மனிதாபிமானி, எம் எல்லோரிடமும் அளவு கடந்த அன்பும் ஆதரவும் கொண்டு உறவாடும் உத்தமர் .........



**சி.சிவமகாராசா**

(தலைவர், இ.செ.ச.வலி.வடக்கு பிரிவு)
"அங்கு பேரானந்தம் அடைக"

உறுப்பினர், தொண்டர், ஊழியர்
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை

## 16ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் வைத்திலிங்கம் நடராசா**

(வசாவிளான்,முன்னாள் பொறுப்பதிகாரி - வலி.கிழக்கு பிரதேசசபை - அச்சுவேலி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.06.1933 | 20.08.1990 |

தி: 2 .08.2006

ஆண்டுகள் 16 ஓடி மறைந்தாலும்
தீர்த்தத்தில் உங்கள் நினைவுகளை
மறக்க மாட்டோம்.

*துஷா இல்லம்,*
*கற்பககுணை,*
*உடுவில்.*

*அன்பு மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

ஸ்ரீராமஜெயம்

## திருமணத் திருமுகம்

நிகழும் மங்களகரமான விய ஆவணித்திங்கள் 8ஆம் நாள் [24.08.2006 வியாழக்கிழமை] முற்பகல் 11.05 முதல் 12 மணிவரையுள்ள சுபவேளையில்

| | |
|---|---|
| கோப்பாய் சிவஸ்ரீ.சோ.இ.பிரணதார்த்திஹரகுருக்கள் சுசந்தி தம்பதியின் கனிஷ்ட புத்திரி | நல்லூர் பிரம்மஸ்ரீ.பா.சுவாமிரட்ணசர்மா திரிபுரேஸ்வரி தம்பதியின் கனிஷ்ட புதல்வன் |
| *சௌபாக்கியவதி ஸ்ரீவித்தியாவை* | *சிரஞ்சீவி குமரேசசர்மாவுக்கு* |

திருமணம் செய்யக் குருவருளும் திருவருளும் சேர பெரியார்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் கோப்பாய் வீரபத்திரசுவாமிகோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் - மணமகனின் இல்லத்தில் அன்று காலை5.30 மணிமுதல் நடைபெறும்.
வதூவரகிருஹப் பிரவேசம் - மணமகனின் இல்லத்தில் மாலை 4 மணிமுதல்.

(இருவீட்டார் அழைப்பு)

| | |
|---|---|
| ஸ்ரீமதி.தி.சுவாமிரட்ணசர்மா 'சாந்தி' தாவடி, கொக்குவில். தொ.பே 021 222 6072 | சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹர குருக்கள் குடும்பத்தினர். வீரபத்திர கோயில், கோப்பாய். தொ.பே 0777 110243 |

(இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

# பஸ் சேவைகளும் மீண்டும் ஆரம்பம்

நல்லூர்,ஓக.23

தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கான பஸ் போக்குவரத்து நேற்று முதல் ஓரளவிற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு நடைமுறை தளர்த்தப்படும் வேளைகளில் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பஸ் சேவைகள் நடைபெறும் என யாழ். பஸ் நிலைய அதிகாரிகள் கூறினார்கள்.

இதேசமயம் குறிகாட்டுவான் - புங்குடுதீவுப் பகுதிக்கு குறைந்தபட்சம் 5 தனியார் பஸ் சேவைகள் வரை நாளொன்றிற்கு இடம்பெறும் எனவும் ஊரடங்குச் சட்ட நிலைமைகளை அவதானித்து அதற்கமைய சேவைகள் இடம்பெறும் எனவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர். ஊர்காவற்றுறைப் பகுதிக்கும் தனியார் பஸ்சேவை இடம்பெறுவதாகவும் அவர்கள் கூறினர்.

அதேசமயம் அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடி ஊடாகச் செல்லும் பஸ்கள் சுமார் முக்கால் மணிநேரம் வரை தாமதப்படுத்தப்படுவதாகவும் இன்று தீவுப் பகுதியில் இருந்து வந்த மக்கள் கூறினார்கள்.(ம-111)

## IDM

Computer Studies Islandwide (pvt) Ltd
216, Navalar Road, Jaffna.

எமது நிறுவனத்தில் சர்வதேச சான்றிதழிற்கான (NCC-UK) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் (December 2006), மற்றும் செப்ரெம்பர் 2006 தேசிய பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் (Dip. in ITC Batch No 19,20,21,22) மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாளை வியாழக்கிழமை (24.08.2006) ஊரடங்கு நீக்கப்பட்டவுடன் அலுவலகத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நிர்வாகம்.**

## திருமணம் ஒத்திவைப்பு

24.08.2006 வியாழக்கிழமை நவாலி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில்

**செல்வன் சிவச்செல்வனுக்கும்**
**செல்வி காயத்திரிக்கும்**

நடைபெறவிருந்த திருமணம் நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்:

| | |
|---|---|
| *திரு.திருமதி. ஜெகஜோதிராசா ஆனைக்கோட்டை மேற்கு, ஆனைக்கோட்டை* | *திரு.திருமதி. சிவராசா நவாலி தெற்கு, மானிப்பாய்.* |

## திருமணம் ஒத்திவைப்பு

24.08.2006 [ஆவணி 8ஆம் நாள்] வியாழக்கிழமை திருநெல்வேலி பழங் கிணற்றடிப்பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில்

**செல்வன் த.கிருபாகரனுக்கும்**
**செல்வி பா.பவதாரணிக்கும்**

நடைபெறவிருந்த திருமணம் நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பின்னர் நடைபெறும் காலம் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

பெற்றோர்:

| | |
|---|---|
| *திரு.திருமதி. தயானந்தசோதி நுணாவில்மத்தி, சாவகச்சேரி.* | *திரு.திருமதி. பாலசிங்கம் இல, 83/15 பலாலி வீதி, திருநெல்வேலி.* |

## தவறிவிட்டது

இரட்ணம் சிவநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (551132269v) இராணுவ அடையாள அட்டை மற்றும் வாகனச் சான்றிதழ்கள், வாகன ஓட்டுனர் சான்றிதழ் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பச்சை நிற பிளாஸ்ரிக் பை 18.08.2006 அன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன் தொலைந்து விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 456, வைத்தம் பாமசியில் (யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்) ஒப்படைக்கவும். உரிய சன்மானம் வழங்கப்படும்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த 19.01.1982, 1ம் பாதம் அனுஷநட்சத்திரம் பாவகிரகம் 93/4, 2ல் செவ்வாய் 5அடி 2அங்குலம், மாநிறம், 24 வயதுடைய மணமகளுக்கு பெற்றோர் வெளிநாட்டில் பிரஜாவுரிமையுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர். இந்தியாவிற்கு வருவதற்கு பிரஜாவுரிமை உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். சீதனம் பேசி தீர்க்கப்படும்.

... இல: 2020
... 
தொ.பே 021 222 7943

## நீங்காத நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | 18ஆம் மாதம் |
|---|---|
|  |  |
| தோற்றம்: 11.05.1926 | தோற்றம்: 18.02.1957 |
| மறைவு: 03.09.2005 | மறைவு: 18.01.2005 |
| *சிவகுரு பிறைசூடி* | *பிறைசூடி அருமைத்துரை* |

அன்பின் திருவுருவமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்திட்ட எங்கள் குடும்ப ஒளிவிளக்குகளை
இன்நாளில் நினைவு கூறுகின்றோம்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய்.*

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கார்த்திகேசு சின்னம்மா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சின்னம்மா நேற்று (22.08.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் தவமணிதேவி (கொழும்பு), சிவநாதன் (கோண்டாவில்), கமலநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் துரைரத்தினம் (கொழும்பு), சித்திராதேவி, லதா ஆகியோரின் அன்பு மாமியும் சித்திரா, சுகந்தி, சுகிர்தரன், சுதாகரன், சுதாரணி ஆகியோரின் பேர்த்தியும் வினோத், சமீரா, கீதாஞ்சலி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2006) புதன் கிழமை ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
கா.சிவநாதன் (மகன்)

## பாலசிங்கம் சண்முகநாதன்



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சண்முகநாதன் 21.08.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சுகந்தினியின் தந்தையும் இராசேந்திரம், ரவீந்திரன், குணரத்தினம், அருள்நாயகம், கனகரத்தினம், அமுதலிங்கம், செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2006) புதன் கிழமை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின் நடைபெற்று பூதவுடல் கொக்கணை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
செல்வராணி (மனைவி)

## திருமதி செல்லத்துரை சத்தியபாலதேவி



திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சத்தியபாலதேவி 21.08.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திருநெல்வேலி வடக்கு காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்துரை தம்பதியரின் பாசமிகு மகளும் ஓய்வுபெற்ற அதிபர் கி.செல்லத்துரையின் பாசமிகு மனைவியும் சத்தியகாந்தன் (பொறியியலாளர், லண்டன்), சிவதொண்டன் (கணக்காளர், லண்டன்), திருமதி அன்னலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி நிலையம் வடக்கு - கிழக்கு மாகாணம்), திருமதி மாலா (கணக்காளர்,லண்டன்), திருமதி மாயி (வங்கி முகாமையாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் திருமதி சிவராணி (லண்டன்), திருமதி சிவரஞ்சினி (லண்டன்), தர்சன் (பொறியியலாளர், லண்டன்), நிதர்சன் (பல்கலைக்கழகம், லண்டன்), பாமனா (டாக்டர், லண்டன்), கிருஷாந் (பல்கலைக்கழகம், லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜனனன் (லண்டன்), ஜெனீசன் (லண்டன்), ஜெனுஷா (லண்டன்), யசுசனா, அபீசன் ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, பத்மநாதன், (இளைப்பாறிய உத்தியோகத்தர், இலங்கை வங்கி), காலஞ்சென்ற சரஸ்வதிஅம்மாள் (இளைப்பாறிய அதிபர், ஈவினை), கணேசநாதன் (இளைப்பாறிய கணக்காளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெயக்குமார், சுரேந்திரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(22.08.2006) காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த அறிவித்தலை நேரகாலத்துடன் அறிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

*22, பலாலி வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 021 4591282*

தகவல்:
குடும்பத்தினர் சார்பாக
இ.சுப்பிரமணியம்
(இளைப்பாறிய அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# பாதிப்புற்ற சகலருக்கும் உதவுவது அரசின் முழுப் பொறுப்பாகின்றது

போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கும் யாழ். குடாநாட்டு மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இங்கு விரைந்து அனுப்பி வைப்பதற்கு அரசு படாதபாடுபடுகின்றது என்ற சாரப்பட கொழும்பில் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

காலநிலை ஒத்துழைக்காத போதிலும் இயன்ற வரையில் ஒரு கப்பலிலாவது பொருள்களை அவசரஅவசரமாக அனுப்பி வைப்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு மும்முரமாகஇருக்கின்றது என்று காட்டுப்படுகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நேரடியாகக் கொழும்புத் துறைமுகத்துக்குச் சென்று இப்பொருட்கள் ஏற்றப்படும் வேகத்தைப் பார்வையிட்டார் என்பது ஊடகங்கள் மூலமாக விவரணச் செய்தியாக சர்வதேச உலகுக்கும் எடுத்துரைக்கப்பட்டது.

உண்மையில், போருக்கு மத்தியில் சிக்குண்டிருக்கும் அப்பாவி மக்கள் மேலான கரிசனை காரணமாகவே மஹிந்தரின் அரசு இவ்வாறு நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். அல்லது பத்து நாட்களுக்கு மேல் விநியோக வழியின்றி சிக்கித் தவிக்கும் குடாநாட்டு மக்களின் அவலம் குறித்து சர்வதேச மட்டத்தில் எழுந்த அழுத்தங்கள், நெருக்குவாரங்களைச் சமாளிப்பதற்காகவும் கூட அரசு இத்தகைய படத்தைப் போடக் கூடும்.

எப்படியானாலும் - யார் குற்றினாலும் - அரிசியானால் சரி. அதுபோல, எக்காரணம் என்றாலும் குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விரைந்து கிடைத்தால் சரி. அந்த வகையில் இந்த முயற்சி - நடவடிக்கை - வரவேற்கத்தக்கது.

ஆனாலும், குடாநாட்டில் யுத்தச் சூழ்நிலை காரணமாக சில ஆயிரம் மக்கள் குடாநாட்டுக்குள்ளேயே பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்திருக்கின்றார்கள். ஏனையோர் தொடர் ஊரடங்கு காரணமாக வேலை வாய்ப்பு, அன்றாடத் தொழில், ஜீவனோபாயம், வருமானம் போன்றவற்றைக் கடந்த சுமார் இரு வாரங்களாக இழந்து பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஆகவே, இந்த மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் கிடைக்கச் செய்யும் அதேசமயம் இழப்புகளுக்கு உரிய நிவாரணமும் வழங்கப்பட வேண்டும்.

மாவிலாறில் நீர் விநியோகம் தடைப்பட்டதால் பாதிப்புற்றவர்கள் என்று கூறுப்படும் தனது மக்களுக்கு நிவாரணமாக நிதி உதவிகளைக் கூட வழங்க முன்வந்த அரசு, யாழ். குடாநாட்டில் யுத்த நடவடிக்கைகளால் இப்போது பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்க முன்வர வேண்டும்.

ஆகவே, இப்போது கப்பலில் அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருட்களை குடாநாட்டில் வெளித்தொடர்பின்றி சிக்கியிருக்கும் ஐந்து லட்சம் மக்களுக்கும் நிவாரணமாக வழங்குங்கள் என்று ஜனாதிபதி மஹிந்தரின் அரசில் சமூக சேவைகள் அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கை நியரயமானது; அர்த்தமுள்ளது. ஆனால், அது ஏற்றுக்கொள்ளப்படாமல் போனமை துரதிஷ்டவசமானது. இந்த அரசில் சமூக சேவை அமைச்சராக இருக்கும் ஒரு தமிழரால் நெருக்கடியில் சிக்கியுள்ள தனது மக்களுக்குச் செய்யக் கூடிய உதவிகளின் - சிங்கள அரசிடமிருந்து பெற்றுக் கொடுக்கக் கூடிய சலுகைகளின் - எல்லை இவ்வளவுதான் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேசமயம், இந்த யுத்தச் சூழ்நிலையால் தமிழர் தாயகத்தில் வெளித் தொடர்பின்றி, விநியோக வசதிகளின்றி, சிக்கியிருப்பவர்கள் ஆக யாழ். குடாநாட்டு மக்கள் மாத்திரம் அல்லர். வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் இவ்வாறு அப்பாவித் தமிழ் மக்கள் பல லட்சம் பேர் சிக்கியுள்ளனர்.

அந்தப் பிரதேசம் தனிநாடு அல்ல, அது இலங்கையில் தனது ஆள்புல எல்லைக்கு உட்பட்ட பகுதிதான் என்று கொழும்பு அரசு உரிமை கொண்டாடுமானால் - அந்தப் பகுதியில் உள்ள தமிழர்களும் இதே போன்று விநியோக வசதிகள் துண்டிக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருப்பதால் - அவர்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமையும், பொறுப்புமாகின்றது.

அங்குள்ள மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட் களை அனுப்பி வைப்பதில் சிரத்தை காட்ட - அல்லது கவனம் எடுக்க - கொழும்பு அரசு மறுக்குமானால் - அல்லது பின் நிற்குமானால் - அது, அந்தப் பிரதேசம் தனக்குரியதல்ல என்பதை அரசே அங்கீகரித்து, ஒப்புக் கொள்வதாகும் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

எனினும், அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிமான பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் இந்த மக்களுக்காக - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிப்போருக்காக - இது விடயத்தில் குரல் எழுப்பியிருக்கின்றமை ஆறுதல் தருகின்றது.

மூதூரிலும் ஏனைய இடங்களிலும் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கும், மற்றையோருக்கும் நிவாரணங்களை அனுப்புவதில் காட்டப்படும் சிரத்தையும், கவனமும் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களிலும் இடம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகளின் விடயத்திலும் காட்டப்பட வேண்டும் என்று அவர் கேட்டிருப்பது சுட்டிக்காட்டத்தக்கது.

வெள்ளத்தால் பாதிப்புற்ற தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு சில லொறிகளிலாவது நிவாரண உதவிகளை தென்னிலங்கைக்குப் புலிகளே நேரடியாக எடுத்துச் சென்று கிராமங்கள் தோறும் நேரில் விநியோகித்த சூழல் சில ஆண்டுகளுக்கு முன் இலங்கைத் தீவில் இருந்தது. ஆனால், இந் நிலைமை இன்று மலையேறிவிட்டது.

தமிழர்களை விரோதிகளாகப் பார்க்கவில்லை - மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் அணுகவில்லை - என்றெல்லாம் இலங்கை அரசு கூறுவது உண்மையானால், வன்னியிலும், புலிகளின் பிற கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் இந்த நெருக்கடி சமயத்தில், அவர்களுக்கும் அவற்றைப் பெற்றுக் கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வர வேண்டும்.

அதைச் செய்ய அரசு தவறும் பட்சத்தில் அந்தப் பிரதேசம் தனி நாடு என்பதையும், அந்த மக்கள் வேறு தனியான நாட்டைச் சேர்ந்த வர்கள் என்பதையும் அரசே ஒப்புக் கொண்டு அங்கீகரிப்பதாகவே அது அர்த்தப்படுத்தப்படும்.

## நெடுந்தீவில் இருந்து கடந்த ஞாயிறன்று படகுச்சேவை

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணிகள் படகுச்சேவை இடம்பெற்றது.

கடமையின் பொருட்டும் ஏனைய அலுவல்கள் காரணமாகவும் நெடுந்தீவில் தங்கியிருந்த சுமார் 25இற்கும் அதிகமான மக்கள் அன்றையதினம் குறிகாட்டுவான் ஊடாக யாழ். நகர் வந்தடைந்தனர்.

இந்தப் பயணச் சேவையின்போது நெடுந்தீவில் நிரந்தரமாக வசிப்பவர்களை அங்கிருந்து வெளியேறப் படையினர் அனுமதிக்கவில்லை.

இதேசமயம், நேற்று முன்தினம் வேலணை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ். நகருக்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இவர்களது அடையாள அட்டைகளைப் பதிவுசெய்த பின்னரே அவர்கள் வெளியேறப் படையினர் அனுமதித்தனர் எனவும் -

அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் பயணிக்க அனுமதிக்கப்படவில்லை எனவும் - யாழ். நகரை வந்தடைந்த சிலர் கூறினார்கள்.

யாழ். நகருக்கு வருவதற்கான பயணக் கட்டணமாக ரூபா 150 வரை ஒவ்வொரு பயணிகளிடமும் அறவிடப்பட்டதாகவும் தெரிகிறது. (ம-111)

## அத்தியாவசிய பொருள்களுடன் றுகுணு கப்பல் புறப்பட்டது

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் 'மோர்ச் றுகுணு' என்ற கப்பல் நேற்றுமாலை யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டுள்ளது. கப்பல் புறப்பட்டது என்ற தகவல் யாழ்ப்பாணத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இக்கப்பல் இரு தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் எனத் தாம் எதிர்பார்க்கின்றனர் எனவும்-

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கி ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் - அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தனியார் வர்த்தகர்களும் கப்பல் மூலம் பொருள்களை எடுத்து வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-1)

## செல்வச்சந்நிதி பெருந்திருவிழா இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஓக.23

சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இன்று பின்னிரவு 1.40 மணிக்கு கொடியேற்றம் நிகழும். அதனைத் தொடர்ந்து அடுத்தமாதம் 9ஆம் திகதி வரை திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

காலைத் திருவிழா காலை 8 மணிக்கும் இரவுத் திருவிழா பி.ப. 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

விசேட திருவிழாக்கள் பின்வருமாறு அமையும்:

ஓகஸ்ட் 27இல் ஆவணிச்சதுர்த்தி, செப்ரெம்பர் 01இல் பூங்காவனம், செப். 02இல் கைலாச வாகனம், செப்.03இல் இந்திரவிமானம், செப்.05இல் சப்பறம், செப். 06இல் தேர், செப். 07இல் தீர்த்தத்திருவிழாவும் மௌனத்திருவிழாவும், செப். 08இல் தொண்டர்பூசைத்திருவிழாவும்.

• வெளியூர்களில் இருந்து முருகனைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு, முந்திய வருடங்களைப் போலவே தாக சாந்தி, அன்னதான வசதிகள் செய்யப்படும் என்று சந்நிதியான் ஆச்சிரம மோகன் சுவாமிகள் உதயனுக்குத் தெரிவித்தார்.

## பிள்ளைத் தேரில் நல்லைக் கந்தன் நேற்று உள்வீதியில் மட்டும் வலம்

யாழ்ப்பாணம், ஓக.23

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று மிகவும் அமைதியான முறையில் ஆலயத்தில் நடைபெற்றது. வழமை போன்று தேர்ப்பவனி நேற்று நடைபெறவில்லை. மாறாக ஆலயத்தின் உட்சுற்றுப் பிரகாரத்தில் மட்டும் பிள்ளைத் தேரில் (சிறிய தேர்) ஆறுமுக சுவாமி வள்ளி தெய்வானை சகிதம் வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார். ஐயாயிரத்திற்குமேற்பட்ட பக்தர்கள் வரை நேற்று ஆலயத்தில் திரண்டிருந்தனர்.

காவடிகள், பறவைக் காவடிகள், பிரதிஷ்டை, அடி அளித்தல் என அனைத்து பக்தி சார்ந்த நிகழ்வுகளும் இடம்பெற்றாலும் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து மக்கள் வர முடியாத நிலையும் இருந்தது.

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழல் மற்றும் ஊரடங்கு காரணமாக இம்முறை தேர் உற்சவம் வழமையான களையை இழந்திருந்தது.

உள் வீதியில் பிள்ளைத் தேரிலேயே சுவாமி வீதிவலம் வந்தார்.

பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்றது. தொடர்ந்து 11மணியளவில் சுவாமி தேரில் ஆரோகணித்தார்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து நீக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் நேற்றுக் காலையில் மீண்டும் போடப்பட்டிருந்தன. நூற்றுக்கணக்கான பக்தர்கள் தமது நேர்த்திகளைச் செலுத்தினர்.

மிகக் குறைந்தளவில் பஸ் சேவைகளும் இடம்பெற்றதனால் வலிகாமத்தின் தூர இடங்களில் இருந்தும் மக்கள் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர். எனினும், அவர்களில் பலர் உரிய நேரத்திற்குள் திரும்பிச் செல்வதற்கான பஸ்ஸைத் தவறவிட்டுத் தவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-111)

## அச்சுவேலியில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,ஓக.23

அச்சுவேலிப் பகுதியில் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 3 படையினர் படுகாயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலிப் பகுதியில் உள்ள படையினரின் காவலரணை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

(ஐ - 03)

## யாழ். மாநகர சபையின் பணிகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ். மாநகராட்சி மன்றத்தின் நடவடிக்கைகள் நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் குறித்த அனைத்து நடவடிக்கைகளும் இன்று புதன்கிழமை முதல் செயற்படுத்தப்படும் எனவும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் கூறினார்.

கடந்த 11ஆம் திகதி இரவு இராணுவத்தினரால் திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து மாநகர சபையின் நடவடிக்கைகள் அனைத்தும் தடைப்பட்டிருந்தன. ஒரு வாரத்தின் பின் தற்போதே அவை மெல்ல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் ஊரடங்கு தளர்வு நேரத்தில் கடமைக்கு வருவதில் சில தடங்கல்கள் இருப்பதால் அவர்களை உடன் வரவேண்டும் என வற்புறுத்தக்கூடியதாக இருக்காது எனத் தெரிவித்த ஆணையாளர் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உடனடியாகவே வேலைக்குச் சமுகமளிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

நேற்றையதினம் கணிசமான அளவு உத்தியோகத்தர்கள் தமது கடமைக்குச் சமுகமளித்திருந்தனர். (ம-111)

## புங்குடுதீவில் இரு பெண்கள் சடலங்கள் கரையொதுங்கின

வலி.வடக்கு,ஓக.23

புங்குடுதீவுக் கடற்கரையில் இரு பெண்களின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. அப்பகுதிக் கிராம அலுவலரின் ஏற்பாட்டில் அவை இரண்டும் நேற்றுமுன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டன.

தண்ணீரில் ஊறி உப்பிப் பெருத்துள்ள சடலங்கள் அடையாளம் கா[illegible] பதற்காக வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் இந்தியா நோக்கிச் சென்றசமயம் கடலில் கவிழ்ந்த வள்ளத்தில் இருந்தவர்களில் இருவரது சடலங்களாக இவை இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. (ம-86)

## வவுணதீவில் குடிமனைகள் மீது ஷெல் மூவர் படுகாயம்; ஆறு வீடுகள் சேதம்!

### புலிகளின் முகாமே இலக்கு என்கிறது பாதுகாப்பு மையம்

மட்டக்களப்பு, ஓக. 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுணதீவு நாவற்காடு கிராமம் மீது நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் மூவர் படுகாயம் அடைந்தனர். ஆறு வீடுகள் முற்றாகச் சேதமடைந்திருக்கின்றன. இரவு 11மணி முதல் 11.30 மணிவரை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு, புலியடிமடு, மங்காகக்கட்டு, குரிசாமனை போன்ற பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

பொன்னுத்துரை டிலானி (வயது 10), பொன்னுத்துரை விஜேந்திரன் (வயது 15), பூபாலபிள்ளை ப[illegible]ானந்தம் (வயது 39) ஆகிய மூவருமே இந்த ஷெல் வீச்சில் காயமடைந்தவர்களாவர். இவர்கள் மூவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பொது மக்களின் ஆறு வீடுகள் ஷெல் வீச்சில் இடிந்து தரைமட்டமாகியிருக்கின்றன. நள்ளிரவுவேளை படையினர் மேற்கொண்ட இந்தத் தாக்குதலினால் பொது மக்கள் பெரிதும் அல்லோலகல்லோலப்பட்டனர். மிகுந்த பதற்றத்துடனேயே தமது பொழுதைக் கழித்தனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உறுதிப்படுத்தினார்.

இரவு வேளைகளில் குடிமனைகள் மீது குண்டுத்தாக்குதல் நடத்துவதையும் பாடசாலை மாணவர்களைக் கொலை செய்வதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தகைய தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோம் - என்று அரியநேந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது இலக்கு வைத்தே இந்த ஷெல் வீச்சு நடத்தபட்டதாக தேசிய பாதுகாப்பு தகவல் மையம் தெரிவித்தது. (த)

## உள்ளூராட்சி சபை ஊழியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.23

உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் அருகில் உள்ள நகரசபை மற்றும் பிரதேச சபைகளுக்குச் சமுகமளிக்கவேண்டும் என பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள்ளார்.

அதேவேளை, வெளிமரவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து மீளத் திரும்பமுடியாத நிலையில் உள்ள உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களையும் அருகில் உள்ள உள்ளூராட்சி சபை அலுவலகங்களில் வரவைப் பதியுமாறு அவர் கேட்டுள்ளார். (ம-1-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலிக்கான விமானசேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது!

கொழும்பு,ஓக.23

இரத்மனாலைக்கும் - பலாலிக்கும் இடையிலான இராணுவ விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும் ஒரு நாளுக்கு இரு சேவைகள் மட்டுமே இடம்பெறுகின்றன என்றும் - அதுவும் மாலையில் அல்லது இரவிலேயே இடம்பெறுகின்றது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடந்த 12ஆம் திகதியிலிருந்து இரத்மனாலையில் இருந்து பலாலிக்கான பயணிகள் மற்றும் இராணுவ விமான சேவைகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டன. ஓடுதளத்தை இலக்குவைத்துப் புலிகள் ஆட்லறித் தாக்குதல்களை நடத்தியமையே இதற்குக் காரணம். இந்தத் தாக்குதலில் ஓடுபாதை சேதங்களுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானப்படை விமானங்கள் பலாலிக்குச் செல்வதற்கு, இதுவரை பயன்படுத்திய பாதைக்குப் பதிலான புதிய பாதை ஒன்றைப் பயன்படுத்துகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்திய வான்பரப்பையும் உள்ளடக்கியதாக இந்தப் பாதை அமைந்துள்ளது. இரத்மனாலையில் இருந்து புறப்படும் விமானம் முதலில் இந்திய வான் பரப்புக்குள் நுழைந்து, இராமேஸ்வரம் அருகாக கடலின் மேலாகப் பறந்து, பின்னர் இளவாலை சேந்தான்குளம் பகுதியின் மேலாகப் பலாலியை வந்தடையும்.

விமானம் பலாலியில் தரையிறங்கும் போதும் அங்கிருந்து புறப்படும் போதும் கடலில் கடற்படைப் படகுகள் பாதுகாப்பு வழங்குவதுடன் விமானப்படை ஹெலிகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

குடாநாட்டு சண்டையில் காயமடைந்த படையினரைக் கொழும்புக்கு ஏற்றிவரும் பணிகளிலும் படையினருக்குத் தேவையான பொருள்களை எடுத்துவருவதிலும் உயர் இராணுவ அதிகாரிகளைப் பரிமாற்றுவதிலேயே விமானங்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றன. விடுமுறையில் தெற்குக்குத் திரும்பும் படையினரை ஏற்றி இறக்கும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

## பொருள்கள் எடுத்துவரும் வர்த்தகர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஓக.23

கொழும்பில் இருந்து பொருள்களைக் கப்பல்மூலம் இறக்கவிரும்பும் வர்த்தகர்களை தமக்குத் தேவையான பொருள்கள் மற்றும் அவற்றுக்குக் கப்பலில் தேவையான இடவசதி ஆகிய விவரங்களுடன் இன்று யாழ். வணிகர் கழகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட ஒரு மணிநேரத்தில் அனைவரையும் கூடுமாறு வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது. உணவுப் பொருள்கள், உப உணவுப் பொருள்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், பால்மா வகைகள், மருந்து வகைகள், கால்நடைகளுக்கான உணவுகள் என்பவற்றை எடுத்து வருவதற்கே முன்னுரிமை வழங்கப்படும் என்றும் வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## நல்லைக் குமரன் நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ். மாநகரசபையால் நல்லூர் உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் இன்று ஊரடங்கு நீக்கப்பட்டு ஒரு மணிநேரத்தில் நல்லை ஆதீனத்தில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

நல்லை ஆதீன மண்டபத்தில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளால் நூல் சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைக்கப்படும்.

கடந்த 14ஆம் திகதி நடைபெறுவதாக இருந்து ஒத்திவைக்கப்பட்ட நூலின் வெளியீட்டுவிழாவில் முதல்நாள் பிரதியைப் பெற்றுக்கொள்ள ஒப்புதல் அளித்த சகலரையும் இன்று சமுகமளித்து நூலைப் பெற்றுக் கொள்ளுமாறு மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் கேட்டுள்ளார். (ம-1)

## உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்காததால்

# பாம்பு கடித்த சிறுமி பரிதாபகரமாக மரணம்

யாழ்ப்பாணம்,ஓக.23

உரும்பிராய் தெற்கில் நேற்று அதிகாலை பாம்புக்கடிக்கு இலக்கான சிறுமி ஒருத்தி உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்காததால் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த செல்வராசா சிவதா (வயது 13) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை 3.15 மணிக்கு பாம்புக்கடிக்கு இலக்கான இச்சிறுமி அங்கிருந்து ஓட்டோவில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார் என்றும் -

வழியில் படையினர் ஒவ்வொரு இடத்திலும் தடுத்து நிறுத்தி சோதித்ததன் காரணமாக அச்சிறுமியை காலை 5.30 மணிக்கே யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவர முடிந்தது என்றும் -

உரிய நேரத்தில் சிறுமியை வைத்திய சாலையில் சேர்ப்பிக்க முடியாமல் போனமையால் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ம-1-86)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தராமையால் திணைக்களங்கள் இயங்கவில்லை.

இதனையடுத்து ஊரடங்கு நீக்கப்படும் நேரங்களில் அலுவலர்கள் தமக்கு அருகில் உள்ள அலுவலகங்களில் கடமைக்குச் சமுகமளிக்கவேண்டும் என அரச அதிபர் கடுமையான உத்தரவு ஒன்றை நேற்றுமுன்தினம் விடுத்திருந்தார். இதன்பின்னர் பெரும்பாலான திணைக்களங்கள் நேற்று திறக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பணிகள் இடம்பெற்றன. கணிசமான ஊழியர்களும் பணிக்குத் திரும்பியிருந்தனர்.

தபால் திணைக்களம், நீதிமன்றங்கள் என்பன நேற்று ஊரடங்கு நீக்கப்பட்ட நேரத்தில் இயங்கின. ஊழியர்களும் பணிக்கு வந்திருந்தனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை யாழ். சாலையும் தனியார் பஸ்கள் சிலவும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவையை வழங்கின. இதனால் பொதுமக்கள் ஓரளவிற்கு போக்குவரத்தில் ஈடுபடக்கூடியதாக இருந்தது. (ம-1-111)

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த வேளை, பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இளைஞனை வழிமறித்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

இளைஞன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 250 மீற்றர் தொலைவிலேயே இந்தச் சம்பவம் நடந்தது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். மல்லாகம் நீதிவான் சரோஜினி இளங்கோவன் சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் உரும்பிராயைச் சேர்ந்த மரக்கறி வியாபாரியான கந்தையா யோகராஜா (வயது 35) என அடையாளம் காணப்பட்டார். (ஐ-86)

## இலங்கை அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகளின் பிரதிநிதிகள், சுவிஸ் நாட்டின் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி, பிரான்ஸ் தமிழர் மனித உரிமை அமைப்பின் செயலாளர் எஸ். கிருபாகரன் உட்பட மதத் தலைவர்கள், இளையோர் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வின் நிறைவில் தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றும் சுவிஸ் அரசிடம் கையளிக்கப்பட்டது.

அம்மனுவில் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

* தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தாயகம் மற்றும் தேசியத்தை அங்கீகரியுங்கள்.
* தமிழீழ விடுதலைப் புலிகளை எங்கள் உத்தியோக பூர்வப் பிரதிநிதிகளாக அங்கீகரியுங்கள்.
* ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலையை நிறுத்துங்கள்.
* தமிழர்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் வன்முறைகளைக் கண்டியுங்கள்.
* ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகத் தடைகளை விதியுங்கள்.
* இடப்பெயர்வுக்கும், அச்சம் கொண்ட வாழ்விற்கும் முற்றுப் புள்ளி வையுங்கள்.
* ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாதத்தை நிறுத்துங்கள்.
* எங்கள் தாகம் தமிழீழத் தாயகம்.
* சுவிஸுக்கு ஈழத் தமிழர்களின் மனிதாபிமான அவல நிலையைப் போக்க காத்திரமான பாத்திரத்தை வகிக்க முன்வாருங்கள்.

தமிழர் பிரச்சினைகள் தொடர்பாக சுவிஸ் சார் சமூகத்தை அறிவூட்டும் செயல்திட்டமும், இளையோர் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டது. (த)

## தமிழ்க் கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச் சபையில் ஒத்திவைப்புவேளை விவாதத்துக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டுமென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பீ நேற்று சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் இது குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டது. விவாதத்தை இன்று புதன்கிழமை நடத்த முடிவு செய்யப்பட்டது.

# அல்லைப்பிட்டி பங்குத் தந்தையை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக 23

யாழ். கத்தோலிக்க மறை மாவட்டத்தின் அல்லைப்பிட்டி பங்குத் தந்தை அருட்திரு ஜிம்றோன் அடிகளார் அல்லைப்பிட்டிப் பகுதியில் மர்மமான முறையில் காணாமற்போயிருக்கிறார். அவருடன் குடும்பஸ்தர் ஒருவரையும் காணவில்லை என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த ஞாயிறன்று ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பங்குத் தந்தையும், பிரஸ்தாப குடும்பஸ்தரான விமலதாஸ் என்பவரும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கித் திரும்பிச் செல்லும் வழியில் - அல்லைப்பிட்டிப் பகுதியில் - காணாமற்போய் விட்டனர் என்று கூறப்படுகிறது.

ஊர்காவற்றுறை நோக்கித் திரும்பும் வழியில் அல்லைப்பிட்டித் தேவாலயத்தைப் பார்வையிடுவதற்காகப் பங்குத் தந்தையும், குடும்பஸ்தரும் அப்பகுதியில் கடற்படையினரின் அனுமதி பெற்றுக் கொண்டு தேவாலயம் நோக்கிச் சென்றதைக் கண்டனர் எனச் சில சாட்சிகள் கூறியிருக்கின்றனர். அதன் பின்னரே இருவரும் காணாமற் போயிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுவதாக யாழ். ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

பங்குத் தந்தையும், குடும்பஸ்தரும் மோட்டார் சைக்கிள் ஒன்றிலேயே அல்லைப்பிட்டிப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இவர்களது கதி தொடர்பாக அல்லைப்பிட்டிக் கடற்படைச் சோதனை முகாமுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, பங்குத் தந்தை அங்கிருந்து மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் சென்று விட்டார் எனக் கடற்படையினர் தரப்பில் கூறப்பட்டது என்றும் தகவல் கிடைத்துள்ளது.

மண்டைதீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் சண்டை மூண்டு மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்த போது அல்லைப்பிட்டிப் பங்குத் தந்தையும், பொதுமக்களுடன் ஊர்காவற்றுறைப் பகுதியில் சென்று தங்கியிருந்தார்.

பிலிப் நேரியார் தேவாலயப் பகுதி மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சில் காயமடைந்தவர்கள் உட்பட தீவுப் பிரதேசங்களில் காயமடைந்த பொதுமக்களை அந்தப் பகுதியில் இருந்து பத்திரமாக மீட்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் பங்குத் தந்தை ஜிம்றோன் தீவிர பங்காற்றி இருந்தார்.

இவர் மிக அண்மையில்தான் யாழ். ஆயரினால் அல்லைப்பிட்டி பங்கின் தந்தையாக நியமிக்கப்பட்டார். இவருடன் காணாமற் போயுள்ள குடும்பஸ்தர் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார். (ஐ)

## புலிகளுக்கு ஆயுதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றது, இது தொடர்பான குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தகவல்களைப் பெறுவதற்குத் தகாத வழிகளில் ஈடுபட்டது போன்ற குற்றச்சாட்டுகளும் இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருக்கின்றன.

தொலைபேசி உரையாடல்களின் பதிவுகள், 'அமெரிக்க அதிகாரிகளுடனான' சந்திப்புகள் என்பவற்றை சாட்சியத் தடயங்களாக வைத்தே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன என்றும் அமெரிக்க நீதித்துறைத் அறிக்கை மேலும் தெரிவித்தது.

அமெரிக்க தேசாபிமானிகள் சட்டம் மற்றும் இதர நிறைவேற்று அதிகாரக் கட்டளைகளின் கீழேயே இவர்களுக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

முருகேசு விநாயகமூர்த்தி, நாச்சிமுத்து சோக்கிரட்டீஸ், நடராசா யோகராசா, சத்தியன் சரச்சந்திரன், திருத்தணிகன் தணிகாசலம், சபாரத்தினம் சகிலால் ஆகிய ஆறு பேரும் இலங்கை வம்சாவளித் தமிழர்கள். இவர்களில் பின்னவர் இருவரும் கனடா வாசிகள்.

இவர்கள் அனைவரும் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுப் பூர்வாங்க குற்றச்சாட்டுகள் வாசிக்கப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பிணை வழங்கப்படவில்லை.

இராணுவத் தளபாடங்கள், நவீன தொலைத்தொடர்புச் சாதனங்கள் மற்றும் இதர தொழில்நுட்பக் கருவிகளைக் கொள்வனவு செய்வது, நிதி திரட்டிக் கொடுப்பது, தர்ம ஸ்தாபனங்கள் வாயிலாகப் பணப்பரிவர்த்தனை புரிவதற்கு உதவியமையும் குற்றசாட்டுகளில் சிலவாகும்.

பிரதிவாதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், இதர தலைவர்களுக்கும் இடையேயும் நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்துள்ளன என்றும் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் போன்று நடித்தே பொலிஸார் இந்தச் சதியை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இலங்கை அரசுக்கு ஆயுதத் தளபாடங்கள் அமெரிக்க அரசால் அனுப்பப்படுவதைத் தடுக்க முடியும் என்று பிரதிவாதிகளில் ஒருவரான சோக்கிரட்டீஸ் திங்களிடம் கேட்டு, அதற்குப் பேரம் பேசியதாகவும் அமெரிக்க ராஜாங்க அதிகாரிகள் போன்று நடித்த பொலிஸார் தெரிவிக்கிறார்கள்.

## வீதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுதான் அந்த மரக்கறிக் கூடைக்கு அடியில் கிளைமோர் குண்டு ஒன்று மறைத்து வைக் கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு வந்த குண்டு செயலிழக்கச் செய் யும் படைப் பிரிவினர் குறித்த கிளைமோரை மீட்டு செயலிழக்கச் செய்தனர்.

கூடையினுள் கிளைமோருடன் கைத் தொலைபேசி ஒன்றும், ரிமோட் கொன்ட்றோல் கருவியும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நேற்றுக் காலை சுமார் 2 மணித்தியாலங்கள் பொரளைப் பகுதியில் பெரும் தேடுதலை நடத்தி னர். எனினும், இந்தத் தேடுதலில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் நேற்றுக் காலை சில மணி நேரம் பொரளைப் பகுதி வீதிகளில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

**வெளிவந்து விட்டது**

நடந்து முடிந்த புலமைப் பரிசில் வினாத் தாள் விடைகளுடன்

பூபாலசிங்கம் புத்தகசாலை (நல்லூர் உற்சவகால பணிமனையில்)

## கிழக்கிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கிழக்கிலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து கிழக்கிற்கும் நேடியாக லொறிகள் சென்றுவருவது தடைசெய்யப்பட்டிருப்பதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர். இதனால், மட்டு., அம்பறை மாவட்டங்களில் உள்ள மக்கள் பெரும் பொருளாதார நெருக் கடிகளை எதிர்நோக்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது.(த)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org